செ.வெ.எண்.32 நாள்.11.10.2017.

திருநெல்வேலி மாவட்டத்தில் பள்ளிக் கல்வித் துறையின் மூலம் ரூ.10.02 கோடி மதிப்பீட்டில் 7 பள்ளிகளில் கட்டப்பட்டுள்ள புதிய கூடுதல் கட்டடங்களை சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்தார். திருநெல்வேலி ஏர்வாடி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற காணொலி நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு, நன்றியினை தெரிவித்தார்.

-------

திருநெல்வேலி மாவட்டத்தில் பள்ளிக் கல்வித் துறையின் மூலம் ரூ.10.02 கோடி மதிப்பீட்டில் 7 பள்ளிகளில் கட்டப்பட்டுள்ள புதிய கூடுதல் கட்டடங்களை சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் காணொலிக் காட்சி மூலம் இன்று (11.10.2017) திறந்து வைத்தார்.

திருநெல்வேலி ஏர்வாடி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற காணொலி நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு, திருநெல்வேலி மாவட்டத்தில் 7 பள்ளிகளின் கூடுதல் கட்டடங்களை திறந்து வைத்தமைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியினை தெரிவித்தார். பள்ளி மாணவிகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியினை தெரிவித்தார்கள்.

மேலும், ஏர்வாடி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், முதன்மை கல்வி அலுவலர் அவர்கள் ஆகியோர் மரக்கன்றுகளை நடவு செய்தனர்.

திருநெல்வேலி மாவட்டத்தில் நபார்டு திட்டத்தின் கீழ், ஏர்வாடி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் ரூ.229.76 இலட்சம் மதிப்பிலும், அயன்குறும்பலாப்பேரி அரசு உயர்நிலைப்பள்ளியில் ரூ.107.81 இலட்சம் மதிப்பிலும், வடக்கு அரியநாயகிபுரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் ரூ.106.43 இலட்சம் மதிப்பிலும், தளபதிசமுத்திரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் ரூ.106.43 இலட்சம் மதிப்பிலும், திருக்குறுங்குடி TVS அரசு மேல்நிலைப்பள்ளியில் ரூ.135.64 இலட்சம் மதிப்பிலும், அம்பாசமுத்திரம் AVRMV அரசு மேல்நிலைப்பள்ளியில் ரூ.154.88 இலட்சம் மதிப்பிலும் என 7 பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள், ஆய்வுக் கூடங்கள் அடங்கிய புதிக கூடுதல் கட்டடங்கள் ரூ.10 கோடியே 1 இலட்சத்து 76 ஆயிரம் மதிப்பீட்டில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஏர்வாடி அரசு மகளிர் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி.தனமணி, பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் திரு.பாஸ்கர், உதவி செயற்பொறியாளர் திரு.சத்தியவாகீஸ்வரன், உதவி பொறியாளர் திருமதி.ஜெயந்தி, அனைவருக்கும் கல்வி இடைநிலைக்கல்வி உதவி மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு.தனசிங்ஜசக்மோசஸ், நாங்குநேரி வட்டாட்சியர் திரு.ஆதிநாராயணன், பள்ளி தலைமை ஆசிரியர் திருமதி.சைலாதங்கம், ஸ்ரீராம் கல்சல்டிங் நிறுவனர் திரு.கிருஷ்ணகுமார், டிவிஎஸ் நிறுவன கள இயக்குநர் திரு.முருகன், ஏர்வாடி டெவலப் கமிட்டித் தலைவர் திரு.அண்ணாவி எம்ஏஎஸ் உதுமான் மற்றும் மாணவிகள், ஆசிரியர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி